# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :27 July 2025
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

**சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்**

***The Colonial Patriarchy and Postcolonial Feminism highlighted in the Novel Saigon - Puducherry***

***Author:*** *R.Praveen, Research Scholar,*

***Guide:****P.K.Sudha, Supervisor, Assistant professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore — 641014.*

***Abstract:***

*In the 1990s, due to Government Policies such as Liberalization, Privatization, and Globalization, and the Nationalization of Ambedkar's works in the centenary decade of his birth, marginalized creative works and research trends prevailed. In this context, Ranajit Guha and his team identified their research as Subaltern studies. The term "Subaltern" refers to the experiences of the oppressed and those pushed to the margins of society. Farmers, Women, Refugees, Transgender individuals, Slaves, Dalits, Black people, Workers, Tribals, Linguistic minorities, and Religious minorities are prioritized in these studies. Amid the current postcolonial context, where feminist research is rapidly progressing, this article focuses on the Colonial Patriarchal dominance portrayed in the novel "Saigon - Puducherry" and explores these patterns through Postcolonial feminist theory.*

***Keywords:*** *Subaltern studies, Colonialism, Patriarchy, Society, Feminism*

***கட்டுரையாளர்: ர.பிரவீன்,*** *முனைவர் பட்ட ஆய்வாளர்,*

***நெறியாளர்: முனைவர் ப.கு.சுதா,*** *நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் — 641014.*

***ஆய்வுச் சுருக்கம்:***

*1990களில் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் போன்ற அரசின் கொள்கைகளாலும், அம்பேத்கர் பிறந்த நூற்றாண்டு தசாப்தத்தில், அவரின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டதாலும், விளிம்புநிலை படைப்பாக்கங்களும் ஆய்வுப் போக்குகளும் மேலோங்கின. இத்தகைய சூழலில், சபால்டர்ன் ஆய்வுகள் (Subaltern studies) என்று*

தங்களுடைய ஆய்வுகளை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள், ரணஜித் குஹாவும் அவரது குழுவினரும் ஆவர். விளிம்புநிலை என்ற சொல், ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வியல், விளிம்பு நிலைக்கு உள்ளாக்கப்பட்டதைக் குறிக்கிறது. விவசாயிகள், பெண்கள், அகதிகள், திருநங்கைகள், திருநம்பிகள், பால்புதுமையர்கள், அடிமைகள், தலித்துகள், கறுப்பின மக்கள், தொழிலாளர்கள், பழங்குடிகள், மொழிச் சிறுபான்மையினர், மதச் சிறுபான்மையினர் போன்ற பலரும் இவ்வாய்வுகளில் முதன்மைப்படுத்தப்படுகின்றனர். தற்போதைய பின்காலனியச் சூழலில், பெண்ணிய ஆய்வுகள் துரிதமாக நடைபெற்று வரும் வேளையில், சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்க வடிவங்களையும், அவ்வடிவங்களை அடையாளம் காண, பின்காலனியப் பெண்ணியக் கோட்பாட்டினை மையமாகக் கொண்டு ஆராய்வதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** சபால்டர்ன் ஆய்வுகள், காலனியாதிக்கம், ஆணாதிக்கம், சமூகம், பெண்ணியம்

**முன்னுரை:**

நாகரத்தினம் கிருஷ்ணாவின் புதினங்கள் இதுவரை தமிழிலக்கியத்தில் இடம்பெறாத வரலாற்றுப் புனைவு வெளிக்குள் அடங்குபவை. விளிம்பு நிலை மக்களின் குரல்களை அங்கீகரித்து, அவர்களைத் தன்னுடைய படைப்புகளில் முன்னிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளார். இன்றைய பின்காலனியச் சூழலில் வரலாறுகளும், புனைவுகளும் கீழிருந்து எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில், சைகோன் - புதுச்சேரி புதினம், புதுச்சேரி பிரெஞ்சுக் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற வரலாற்றையும், புதுச்சேரியில் இருந்து சைகோனுக்கு புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களின் வரலாற்றையும் எடுத்துரைக்கிறது. இவ்வாய்வுக் கட்டுரையானது, இப்புதினத்தில் இடம்பெறும் காலனிய மனப்பான்மை கொண்ட ஆணாதிக்கத்தையும், பின்காலனியப் பெண்ணியக் கூறுகளை அடையாளம் காண்பதாகவும் அமைகிறது.

**பின்காலனியமும், பெண்ணியமும்:**

பெண்ணியம் என்னும் கோட்பாடு, நேர்க்கோடு அற்றதாகவும், ஓர்மை அற்றதாகவும் மையங்களைச் சிதைக்கும் நோக்கத்துடனும் செயல்படுகிறது. இதைப்போலவே, பின்காலனியம் என்று கோட்பாட்டு வடிவமும் செயல்படுகிறது. பெண்ணியத்தின் படி, ஆணாதிக்கமும், பின்காலனியத்தின் படி, காலனியமும் மையம் கொண்டவையாக விளங்குகின்றன. இவ்விரு கோட்பாடுகளும் மையங்களைத் தகர்க்கும் எதிர் வடிவ கோட்பாடுகளாக விளங்குகின்றன. ஆனால், இவ்விரண்டு கோட்பாடுகளில் இருக்கும் போதாமையை க.பஞ்சாங்கம் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டி, பின்காலனித்துவ பெண்ணியம் உருவானதை விளக்குகிறார்.

"காலனித்துவம் குறித்து ஆய்வதிலும், பன்னாட்டு தொழிற்பிரிவினை குறித்துக் கேள்வி எழுப்புவதிலும் பெண்ணியத் திறனாய்வு கவனம் செலுத்துவதில்லை என்று அதன் பாராமுகத்தைப் பின் காலனித்துவம் குற்றம் சாட்டுகிறது. அதுபோல, பின்காலனித்துவம் குறித்த ஆய்வில், பாலினம் குறித்த பகுப்பாய்வு இடம்பெறாததைப் பெண்ணியத் திறனாய்வு வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது. ஆக மொத்தத்தில் இவ்விரண்டு விடயங்களையும் கவனத்தில் கொண்டு உருவானதே பின்காலனித்துவப் பெண்ணியமாகும்". (பஞ்சாங்கம்.க, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.301)

ஒற்றை மையத்தை தகர்த்தெறிய பல்வேறு எதிர் வடிவிலிருக்கும் கோட்பாடுகளும் சேர்ந்தியங்க வேண்டிய நிலை உள்ளது அல்லது அவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது. சான்றாக, பெண்ணியம் 'கட்டுடைத்தல்' (Deconstruction) என்ற பின்நவீனத்துவக் கோட்பாட்டின் கூறினைக் கொண்டு, ஆணாதிக்கக் கருத்தியல்களையும், மையச் சொல்லாடல்களையும் தகர்க்கிறது. இதைப்போலவே, பின்காலனியம், காலனியம் உருவாக்கிய புனிதங்களையும் கருத்தாக்கங்களையும் தகர்க்கிறது.

**காலனியமும், ஆணாதிக்கமும்:**

காலனியம், தான்✕பிற, சுயம்✕மற்றமை, அகம்✕புறம், உயர்வு✕தாழ்வு என்ற இணை முரண்களை அல்லது இருமை எதிர்வுகளை , காலனியாதிக்கத்திற்குள்ளாக்கப்பட்ட மக்கள் மீது உளவியல் ரீதியாக உற்பத்தி செய்தது. இதனை எட்வர்ட் செய்த், கீழைத்தேயவியல் (orientalism) என்ற நூலின் மூலமாக விரிவாக ஆராய்ந்தார். மேற்குலகில் இருப்பவர்களை நாகரிகமானவர்கள் என்றும், கிழக்குலகில் இருப்பவர்களை காட்டுமிராண்டிகள் என்றும் காலனியம் உருவாக்கிய அறிவு ஏகாதிபத்திய பிம்பத்தை செய்த் கட்டுடைத்தார்.

அறிவு என்பதே மேற்குலக அறிவுதான் என்று காலனித்துவவாதிகள் தமதாக்கிக் கொண்டதும், கீழை நாட்டின் மக்களை அறிவற்றவர்கள் என்று கட்டமைத்ததையும் வரலாறு நெடுகிலும் காண முடிகிறது. இதனை, மெக்காலேயின் கூற்றுகளால் அறிந்து கொள்ளலாம்.

"ஒரு சிறந்த ஐரோப்பிய நூலகத்தின் ஓர் அடுக்கு, இந்தியா மற்றும் அரேபிய நாடுகளின் ஒட்டு மொத்த இலக்கியங்களுக்குச் சமமானது என்ற கூற்றை மறுக்கக் கூடிய கீழ்த்திசையியலாளர் எவரையும் நான் கண்டதில்லை. மேலும் அரேபிய, சமஸ்கிருதக் கவிதையைப் புகழ்வாய்ந்த ஐரோப்பிய நாட்டிலக்கியங்களோடு ஒப்பிடக் கூடிய துணிச்சல் மிக்க கீழ்த்திசையியலாளர் எவரையும் நான் சந்தித்ததில்லை."(இரத்தினக்குமார்.ந, பின்காலனியம் சமூகம்-இலக்கியம்-அரசியல்,ப.16)

“நாங்கள் ஆள்கிறோம்; ஒரு வர்க்கத்திற்குட்பட்ட நபர்களை, அவர்கள் இரத்தத்தாலும் நிறத்தாலும் இந்தியர்கள். ஆனால் சுவையில், கருத்து வெளிப்பாடுகள் ஒழுக்கங்களில், அறிவுத்திறத்தில் ஆங்கிலேயர்கள்”(மேலது, ப.17)

இதன்மூலம், அறிவு என்பது காலங்காலமாக அதிகாரத்தோடு தொழிற்படுவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இவ்வதிகாரம் என்பது பெரும்பாலும் ஆண்களோடு தொடர்புடையதாகவே இருக்கிறது மேலும், காலனியம் என்பது சுயத்தை தன்னிலையாகவும், மற்றமையை அந்நியமாகச் சித்தரிக்கின்ற போக்கைக் கொண்டதாகவும் திகழ்கிறது. இந்தச் சுயம் என்ற மனோபாவம், ஆண்களுக்குரியதாகவும், மற்றமையை பெண்களுக்குரியதாகவும் கருதும் போக்கு, காலங்காலமாக தந்தையாதிக்க மனக்கட்டமைப்பிற்குள் புரையோடியிருப்பதைக் காண முடிகிறது. காலனியம் உற்பத்தி செய்த அல்லது கட்டமைத்த இணைமுரண்களைப் போலவே, தந்தையாதிக்கச் சமூகமும், அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும், தங்களுடைய இருத்தலை வெளிப்படுத்தவும் இணைமுரண்களை உற்பத்தி செய்தன என்று ஹெலன் சிக்சு கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

“இந்த இணைமுரண்களில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இணைமுரண் பகுதிகள் வலுவற்றதாக ஆற்றல் அற்றதாக இருப்பதைக் கண்டறிந்தார். இணைமுரண்களுக்கு இடையிலான ஆதிக்கப் போராட்டத்தின் இறுதியில் வெற்றி என்பது செயல்பாட்டோடும்(Active) தோல்வி என்பது இயங்காமையோடும்(Passive) இணைக்கப்படுகின்றன. தந்தைவழிச் சமூகத்தில் எப்போதும் வெற்றி பெறுபவன் ஆணாக இருக்கின்றான். இயங்காமை, மரணம் ஆகியவற்றைப் பெண்மையோடு இணைத்துள்ளமையை சிக்சு வன்மையாக எதிர்த்தார்.”(விஜயலட்சுமி.த, பெண் பெண்ணியம் பெண் நிலை, பக்.78,79)

எனவே, தந்தையாதிக்கச் சமூகம், அடிப்படையில் காலனியாதிக்க மனோபாவத்தோடு செயல்பட்டதைப் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல பெண்ணியக் கோட்பாட்டாளர்களும் விளக்கிச் சென்றுள்ளனர்.

தந்தையாதிக்கச் சமூகத்தை காலனியத்தோடும், இந்திய நாட்டை பெண்ணியத்தோடும் ஒப்புநோக்குகின்ற பண்பை, பாரதியார் இயற்றிய பாஞ்சாலி சபதம் வெளிப்படுத்துகிறது. இந்திய இதிகாசத்திலுள்ள தொன்மக் கதையின் ஒரு கூறினைக் கொண்டு, காத்திரமான பின்காலனியப் பிரதியை, பாரதியார், காலனிய ஆட்சிக்காலத்திலேயே உருவாக்கினார், இப்பிரதியில் இந்திய நாட்டை பாஞ்சாலியோடும், வெள்ளையர்களைக் கௌரவர்களோடும், இந்திய மக்களை பாண்டவர்களோடும் உருவகம் செய்து, அக்காப்பியத்தை உருவாக்கினார்.

**'சமூகம்' என்னும் ஆணாதிக்க நிறுவனம் பெண்களை ஒடுக்குதல்:**

ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை, பெண்ணாக ஆகிறார் என்பது சிமொன் தெ பொவ்வாரின் கூற்றாகும். அவர், "பெண் என்பவள் சமுதாயத்தின் உருவாக்கமே அன்றி உயிரியலின் உருவாக்கமல்ல. ஆண்-பெண்ணென்று அடையாளங்களையும் அவைகளுக்கான பண்புகளையும் உயிரியல் கட்டமைப்பதில்லை, சமுதாயம் கட்டமைத்தது. இயற்கையில் இனம் சார்ந்த மனித இயல்புகள் என்று ஒன்றுமில்லை. பெண் ஒருபோதும் ஆட்டுவிப்பவளாகவோ (Subject) அல்லது கருதுபொருளாகவோ நடத்தப்படுவதில்லை, அவள் ஆடப்பிறந்தவள். இச்சமுதாயத்தில் அவளும் ஒருத்தி அல்ல அவள் வேறு (other) - வேறானவள்." (நாகரத்தினம் கிருஷ்ணா, சிமொன் தெ பொவ்வார், ப.23) என்று மேற்கண்ட கூற்றுக்கு விளக்கம் தருகிறார். இங்கு விவரிக்கப்படும் சமுதாயம் அல்லது சமூகம் என்பது கூடி வாழும் மனிதர்களைக் குறிக்கும் சொல்லாகத் திகழ்கிறது. இச்சமூகம், தொடக்கக் காலகட்டத்தில் ஆதிகால பொதுவுடைமைச் சமூகமாக விளங்கியது. இதற்குப் பெண்ணே தலைமை தாங்கினாள். அதன் பிறகு பெண், அத்தலைமை இடத்திலிருந்து இறக்கப்பட்டு, ஆண் அவ்விடத்திற்குச் சென்றதால் சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலகட்டத்தில் சமூகம் என்பது ஆண்கள் உருவாக்கிய வெளிக்குள் வந்ததால், பெண்களைப் பாலின (Gender) அடிப்படையில் கட்டமைத்து, அவர்களை ஒடுக்கினர்.

காலங்காலமாக, நம் தமிழ்ச் சமூகத்தில் பெண்களை இரண்டாம் பாலினமாகவும், இரண்டாம் நிலையில் வைத்து பார்க்கும் மனப்பான்மையும் இருந்ததை நம்முடைய இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. பெருமையும், உரனும் (வீரமும்) ஆண்களுக்குரிய பண்புகளாகவும், அச்சம், நாணம், மடம் போன்றவை பெண்களுக்குரிய பண்புகளாகவும் இருப்பதை தொல்காப்பியம் முன்வைக்கிறது. மேலும், "வினையே ஆடவர்க்குயிரே; மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென" (குறுந்.135) என்று ஆண்கள் வெளிவேலைக்கு உரியவர்களாகவும், பெண்கள் வீட்டுவேலைக்கு உரியவர்களாகவும் இருந்ததைச் சங்கச் சமூகத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இதன்மூலம், தொல்காப்பியரின் காலகட்டத்திலும், சங்கக் காலத்திலும் வாழ்ந்த பெண்கள், உயிரியல் பெண்களாக அன்றி, சமூகப் பெண்களாகக் கட்டமைக்கப்பட்டு, தந்தையாதிக்கச் சமூக அளவுகோல்களின் அடிப்படையில் தொழிற்பட்டதை அறிந்து கொள்ளலாம்.

இப்புதினத்தில் இடம்பெறும் வேதவல்லியின் தாய், புதிதாகத் திருமணமான தன் மகளிடம், "பொண்ணாப் பொறந்தவளுக்கு எதுவும் சதமில்லைங்கிறதப் புரிஞ்சுகிட்டா நீ இப்படிக் கேக்கமாட்ட. உன்ன மாதிரி பொறந்த வீடு எனக்கில்லையா? அப்பா, அம்மா, அண்ணன், தம்பின்னு யாருமில்லையா? எல்லாரையும் மறந்துட்டு புருஷன் வீடே கதின்னு இந்த வீட்டுக்கு

வந்தேன். அத்தை, மாமா, நாத்தி, கொழுந்தன், கொழுந்தி, பிள்ளைகள், பெண்ணென்று புது சொந்தங்கள் கிடைச்சாங்க. இப்போ எனக்குத் துணையா எத்தனை பேர் இருக்காங்க? நீ கிளம்பி போயிட்ட, நாளைக்கு உன் தம்பிகளுக்கு பொண்டாட்டிகள் வந்தா அவங்களும் இல்லைன்னு ஆயிடும். எனக்கு அவர், அவருக்கு நான் என்று காலத்தைத் தள்ளனும். அப்படித்தான் நம்ம சமூகம் சொல்லுது."(நாகரத்தினம் கிருஷ்ணா,சைகோன் புதுச்சேரி,ப.48) என்று ஆணாதிக்கச் சமூக வெளிக்குள் பெண்கள் சிக்கித் தவிப்பவர்களாகவும், அதைத் தொடர்ந்து,

"மாங்கல்யம் கழுத்துல தொங்குற வரைக்கும் நமக்கு மரியாதை. கொஞ்ச நாளா உங்க அப்பாருக்குப் பாகூர் பிடிக்கலையாம், புதுச்சேரிக்குப் போகலாங்கிறார். எனக்கு சம்மதமா, சம்மதமில்லையா என்கிற அக்கறை எல்லாமில்லை. ராமன் இருக்குமிடம் அயோத்தி, ஆகையால் நானும் புதுச்சேரிக்குப் புறப்படணும்." (மேலது, ப.49) என்பதன் மூலம் காலங்காலமாக ஆணாதிக்கச் சமூகத்தில் கெட்டித்தட்டிப்போன விழுமியங்களுக்கும், மதிப்பீடுகளுக்கும் ஆட்படுபவர்களாக பெண்கள் இருப்பதை இது வெளிப்படுத்துகிறது.

வேதவல்லியின் கணவரான சுப்புராயன், தன்னுடைய சாதி மத அடையாளங்களைத் துறந்து, ரெனோன்சான் மூலம் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்று, பிரெஞ்சுக் காலனியாதிக்கத்திற்குட்பட்ட சைகோனுக்குச் செல்ல முடிவெடுத்த விஷயத்தை தன்னுடைய மனைவியான வேதவல்லியிடம் தாமதமாகச் சொன்னதோடு மட்டுமில்லாமல், அவளுடைய உறவினர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்றும், அவர்கள் புலம்பெயர்ந்து சைகோனுக்கு வந்த போதும் சுப்புராயன் தான் விருப்பம் போல செயல்பட்டதை, "என்னைக் காட்டிலும் அதிக நேரம் வெளிஉலகத்தில் இருந்துட்டு வீட்டுக்குள்ள வர்றீங்க, கூடுதலான மனிதர்களோடு பழகுறீங்க. காலம்காலமா ஆம்பிளைகளுக்கு உள்ள சுதந்திரம் இது. சமூகப் பார்வை விஸ்தாரமா ஒங்களுக்கு நெலத்தை ஒதுக்கியிருக்குது. நீங்க எங்கேயும் போகலாம் எத்தனை மணிக்கும் திரும்பலாம். எங்களுக்கு அப்படியில்லை. அது எங்களுக்கென எழுதிவைத்துள்ள ஷரத்துக்குள்ள நாங்க இருந்தாகணும்."(மேலது, ப.323) என்று வேதவல்லி உரைப்பதன் மூலம், ஆணாதிக்கச் சமூகம் உருவாக்கிய வெளிக்குள் ஆண்களுக்கான சுதந்திரத்தையும், பெண்களுக்கான சுதந்திரமின்மையையும் இக்கூற்று தெளிவுப்படுத்துவதோடு, தனது சொந்த ஊரில் அனுபவித்த ஆணாதிக்க மேலாண்மையை புலம்பெயர் வாழ்விலும் பெண்கள் அனுபவிக்கின்றனர் என்பதை இது நிரூபிக்கின்றது.

வேதவல்லியின் தாய் வாழ்ந்த காலகட்டமானாலும், வேதவல்லி வாழ்ந்த காலகட்டமானாலும், சமூகம் என்பது தொடர்ந்து ஆண்களால் கட்டமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகவும், அச்சமுகம் வரையறுத்த கட்டுப்பாடுகளை மீற முடியாதவர்களாகவும், அக்கட்டுப்பாடுகளுக்குட்பட்டு நடப்பவர்களாகவும் பெண்கள் இருப்பதை உணர முடிகிறது.

**இரட்டைக் காலனியாதிக்கம்:**

மேற்கத்திய நாடுகளிலுள்ள பெண்கள், தந்தையாதிக்கச் சமூகத்தால் மட்டுமே ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த நிலையில், மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த பெண்கள், தந்தையாதிக்கச் சமூகத்தால் மட்டுமல்லாமல் ஏகாதிபத்தியத்தாலும் ஒடுக்கப்படுவதால், அவர்கள் இரட்டைக் காலனியாதிக்கத்திற்கு (Double Colonization) உட்படுகிறார்கள். இதனை க.பஞ்சாங்கம்,''மூன்றாம் உலக நாட்டுப் பெண்கள், மூன்றாம் உலக நாட்டு ஆண்களை விட இரண்டு மடங்குக் கூடுதலாக ஒடுக்கப்படுகின்றனர். கிறிஸ்டன் ஹோல்ஸ்ட் பீட்டர்சென் மற்றும் அன்னா ரூதர்ஃபோர்டு ஆகியோர் இரட்டைக் காலனித்துவம் என்கிற சொற்றொடரால் இதனை விளக்குகின்றனர். காலனித்துவத்தின் ஆதிக்க முறைமை மற்றும் தந்தை வழிச் சமூக அமைப்பின் ஆதிக்க முறைமை ஆகிய இரண்டு வகையான ஆதிக்கத்திற்கும் மூன்றாம் உலக நாட்டுப் பெண் உள்ளாவதையே இரட்டைக் காலனித்துவம் என்கின்றனர்'' (பஞ்சாங்கம்.க, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், பக்.301,302) என்று மேலைநாட்டு அறிஞர்களின் விளக்கங்களோடு, இக்கருத்தை முன்வைக்கிறார்.

இப்புதினத்தில் இடம்பெறும் வேதவல்லி, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளை, பதினான்கு வயதில், முப்பது வயதடைந்த தாய்மாமனான சுப்பராயனுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். சுப்புராயன், வேதவல்லியின் ஒப்புதலைப் பெறாமல், பிரெஞ்சுக் காலனியாதிக்கத்திற்குட்பட்ட வியட்நாமிற்கு அழைத்துச் செல்கிறார். வேதவல்லி, ''தான் ரெனோன்சான் எடுத்துக்கொண்டதையே ஒரு வாரம் கழித்து நெருங்கிய சிநேகிதர்களிடத்தில் தெரிவித்து அலுத்துப் பொண்டாட்டிகிட்டச் சொன்ன மனுஷன். பொட்டைக் கழுதைகளுக்குத் தெரிந்து ஆவப்போவதென்ன என்பது அவருடைய உயர்ந்த அபிப்ராயம். உடுக்கத் துணி, இந்திரியங்கள் தாகவிடாயில் தவிக்கிறபோது தாம்பத்ய உறவு, ஐரோப்பியர் கொண்டாட்டமோ, தமிழர் விழாக்களோ எதுவென்றாலும் தேர்போல ஜோடிச்சு, அம்மனைப்போல அலங்கரிச்சு இழுத்துச் சென்று சபையில் நிறுத்தும் புருஷ லட்சணம்.'' (நாகரத்தினம் கிருஷ்ணா, சைகோன் புதுச்சேரி, ப.115) என்று சுப்புராயனின் ஆணாதிக்கச் சிந்தனைப் போக்குகளைப் புலப்படுத்துகிறாள். மேலும், ஜப்பானியரின் ஆட்சிப்பிடியிலிருந்த வியட்நாமிற்கு வருகைப் புரிந்த சுபாஷ் சந்திர போசை வரவேற்கச் சென்ற வேதவல்லியை, அன்றைய இரவு முழுவதும் வீட்டிற்குள் விடாமல், வெளியிலேயே நிறுத்தினார், சுப்புராயன். எனவே, பிரெஞ்சுக் காலனியாதிக்கத்திற்கும், சுப்புராயன் என்ற ஆணாதிக்கத்திற்கும் ஆட்பட்டவளாகவும் வேதவல்லி விளங்குகிறாள்.

**மும்மைக் காலனியாதிக்கம்:**

இந்தியா போன்ற சாதியக் கட்டமைப்புகள் வலுவாய் இருக்கும் நாட்டில், ஒரு பெண் தந்தையாதிக்கச் சமூகத்தாலும், ஏகாதிபத்தியத்தாலும் மட்டுமல்லாமல், சாதியத்தாலும் ஒடுக்கப்பட்டாள். இதனை, மும்மைக் காலனியாதிக்கம் (Triple Colonization) என்பர். இப்புதினத்தில் வரும் சேரிப் பெண்ணான ஜானகி, மும்மைக் காலனியாதிக்கத்திற்கு ஆட்படுகிறாள். தன்னோடு பழகி, கருவை உருவாக்கி விட்டு, வியட்நாமிற்குச் சென்ற வேதவல்லியின் தம்பி, சிங்காரவேலுவை அடைய முடியாமல் தவிக்கிறாள் ஜானகி. இதனால், தன்னுடைய மகனான பொன்னுச்சாமியை வளர்த்து, கல்வி கொடுத்து, அவனுடைய தந்தையைக் கேள்வி கேட்க, அதே வியட்நாமிற்கு அனுப்புகிறாள். மகனைப் படிக்க வைக்க வெள்ளைக்காரத்துரை வீட்டில் வேலைக்காரியாகச் சேர்கிறாள். அந்தத் துரையின் மனைவி, "எனக்கு இன்றைக்கு உடம்புக்கு முடியலை, முதலாளிக்குத் துணையாக நீதான் நித்திரை கொள்ள வேண்டும்." (மேலது, ப.348) என்கிறாள். ஆனால், ஜானகி மறுத்து விடுகிறாள். இவற்றோடு, ஒரு நாள் வேதவல்லியின் அண்ணனான சதாசிவமும், அவருடைய மகன் இருவரும் நடந்து வருவதைக் கண்ட ஜானகி, அவரின் மகனைப் பார்த்து, "உன் தம்பியும் செக்கச் செவேல்னு, ஒசரமா உன்னை போலவே ராசா மாதிரி இருப்பான்" (மேலது, ப.349) என்கிறாள். ஆனால் சதாசிவம், "பெரியகடை சந்தைக்குப் போயிருந்தேன். அங்கே எந்தம்பிக்கிட்ட புள்ளை வாங்கினவ வக்கணையா பேசவந்துட்டா. எம்பிள்ளையைத் தொட்டு சொந்தம் கொண்டாடறா. அவள் பிள்ளை சாயலில் என் மகன் இருக்கானாம். கொழுப்பைப் பாரு." (மேலது, ப.350) என்று ஜானகியை உதாசீனப்படுத்துகிறார். இதன்மூலம், காலங்காலமாக இருக்கும் ஆண்டைகளின் சாதியக் காலனிய மனப்பான்மையும், சாதிய மேலாதிக்க உளவியலும் சதாசிவத்தின் மூலமாக வெளிப்படுகிறது.

**முடிவுரை:**

சைகோன் - புதுச்சேரி புதினத்தில் இடம்பெறும் பெண்கள், ஐரோப்பியக் காலனியாதிக்கத்திற்கும், ஆணாதிக்கக் காலனியாதிக்கத்திற்கும், சாதியக் காலனியாதிக்கத்திற்கும் உட்பட்டவர்களாக விளங்குகின்றனர். சமூகம் என்பது இயல்பாகவே ஆணாதிக்கச் சமூகமாக இருப்பதோடு, அச்சமுகம் உருவாக்கிய மதிப்பீடுகளுக்குள் சிக்கித் தவிப்பவர்களாகப் பெண்கள் இருக்கின்றனர். இவ்வாணாதிக்கப் போக்கு தொடர்ந்து வரும் தலைமுறைகளிடத்திலும் தொடர்வதோடு, அது தக்கவைக்கப்படுவதையும் காணலாம். இச்சிக்கலில் இருந்து வெளிவர, ஆணாதிக்கச் சமூகம் உருவாக்கிய மதிப்பீடுகளையும், அதிகார உளவியல் மனக்கட்டமைப்பையும் பெண்கள் கட்டுடைத்தல் வேண்டும்.

**துணைநூற் பட்டியல்:**


1. இரத்தினக்குமார்.ந (தொ.ஆ), பின்காலனியம் சமூகம்-இலக்கியம்-அரசியல், பாவை பப்ளிகேஷன்ஸ், முதல் பதிப்பு-2017.
2. நாகரத்தினம் கிருஷ்ணா, சைகோன் - புதுச்சேரி, டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், முதல் பதிப்பு-2021.
3. நாகரத்தினம் கிருஷ்ணா, சிமொன் தெ பொவ்வார், பரிசல் புத்தக நிலையம், முதல் பதிப்பு -2021.
4. பஞ்சாங்கம்.க, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு-2016.
5. விஜயலட்சுமி.த, பெண் பெண்ணியம் பெண் நிலை, காலசகம் பதிப்பகம், முதல் பதிப்பு-2020.


***Bibliography:***


1. *Rathna Kumar.N, Pinkalaniyaum Samoogam-Ilakkiyam-Arasiyal, Pavai Publications, First Edition- 2017.*
2. *Nagarathinam Krishna, Saigon — Puducherry, Discovery Publications, First Edition-2021.*
3. *Nagarathinam Krishna, Simon the Bowar, Parisal Putthaga Nilayam, First Edition-2021.*
4. *Panchangam.K, Ilakiyamum Thiranaivu Kotpadugazhum, Annam Publications, Second Edition-2016.*
5. *Vijayalakshmi.T, Pen Penniam Pennilai, Kalasagam Pathippagam, First Edition-2020.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com